பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 11 2026 TUESDAY - 06 45 AM
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் உயர்கல்வித் துறையில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

2. விண்வெளித் துறையில் இந்தியா விரைவான முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் கால்நடைத் துறையில் 2 ஆயிரம் காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில அமைச்சர் திருமதி கமலி அறிவித்துள்ளார்.

4. பசுமை மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு தவறி விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. கத்தார் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<<

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் உயர்கல்வித் துறையில் மிகப் பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக குடியரசுத் துணைத் தலைவர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

கட்டாக்கில் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழா ஒன்றில் பேசிய அவர், 2014-ம் ஆண்டில் 760 ஆக இருந்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை தற்போது ஆயிரத்து 400-ஐத் தாண்டியுள்ளதாகக் கூறினார்.

ஐஐடி-களின் எண்ணிக்கை 16-லிருந்து 23 ஆகவும், ஐஐஎம்-களின் எண்ணிக்கை 13-லிருந்து 22 ஆகவும் அதிகரித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

எய்ம்ஸ் நிறுவனங்களின் எண்ணிக்கை 7-லிருந்து 20 ஆக உயர்ந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 4 கோடியே 50 லட்சமாக உயர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் ஒழுக்கம், மனிதநேயம் ஆகிய பண்புகளை வளர்த்துக்கொண்டு, நாட்டின் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று திரு சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

>>>>><<<<<<

விண்வெளித் துறையில் இந்தியா விரைவான முன்னேற்றம் அடைந்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், விண்வெளித் துறையின் சாதனைகள் குறித்து, இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. சோம்நாத் எழுதியுள்ள கட்டுரையை பகிர்ந்துள்ளார்.

தெளிவான தேசிய பார்வை நாட்டின் விண்வெளி திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவியிருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

விண்வெளித்துறையில் தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிப்பது, விண்வெளியில் இந்திய நிலையத்தை அமைப்பது, விண்வெளிக்கு மனிதனை அனுப்புவது உள்ளிட்டவை மிகப்பெரிய நடவடிக்கைகள் என்றும், எதிர்காலத்தில் மேலும் பல சாதனைகள் நிகழ்த்தப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>><<<<<<

தமிழகத்தில் கால்நடைத் துறையில், இரண்டாயிரம் காலிப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திருமதி கமலி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்துறையில் மருத்துவர் அல்லாத காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கடலூரில் பாதிக்கப்பட்ட கோழிகள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், அங்கு பணியில் இருந்தவர்களுக்கு நோய்த் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் கால்நடை மருத்துவமனைகளில் 245 மருத்துவ வாகனங்கள் உள்ளதாகவும், மேலும் 143 உதவி வாகனங்கள் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும் திருமதி. கமலி தெரிவித்தார்.

>>>>><<<<<<

பசுமை மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு தவறி விட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாநிலத்தில் மின் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்காமல், 35 ரூபாய்க்கு மின்சாரக் கொள்முதல் செய்ய மாநில அரசு அவசரம் காட்டியது ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மத்திய மின்சார ஆணையத்தின் புள்ளிவிவரங்களின் படி, நாட்டின் ஒட்டுமொத்த பசுமை மின் உற்பத்தி 11 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், தமிழகம் 2 புள்ளி ஒரு சதவீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் இதில் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில், தமிழகம் பின்தங்கியிருப்பது மாநில அரசின் தோல்வியை எடுத்துக் காட்டுவதாக அவர் கூறியுள்ளார்.

எனவே, அதிக விலைக்கு மின்சாரம் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகளை தவிர்த்து, காற்றாலை மற்றும் சூரியசக்தி மின் உற்பத்தி திட்டங்களை விரிவுபடுத்துதல் உள்ளிட்டவற்றில் த.வெ.க. அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<<

தமிழகத்தில் அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு கல்லூரிகளில் 7 ஆயிரத்து 198 உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் பற்றாக்குறையால் அரசு கல்லூரிகளில் கல்வித் தரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக மாணவர் சேர்க்கை குறைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கல்லூரிகளுக்கு புத்துயிர் ஊட்ட, காலிப்பணியிடங்கள் அனைத்தையும் நிரப்ப வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<<

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி தருவதில் மாநில அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அமமுக பொதுச் செயலாளர் திரு. டிடிவி தினகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு மருத்துவமனைகளுக்கான மருந்துகளை கொள்முதல் செய்வது, அவற்றின் இருப்பை கண்காணிப்பது உள்ளிட்ட முக்கிய பொறுப்புகளை நிறைவேற்றும் மருத்துவ பணிகள் கழகம், தற்போது டாஸ்மாக் நிறுவனத்தின் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகளை கோரி வருவதாக தெரிவித்துள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தாமல், மருத்துவப் பணிகள் கழகம், டாஸ்மாக் கிடங்குகளின் பராமரிப்புக்கு முன்னுரிமை அளிப்பது அதிருப்தி அளிப்பதாக உள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகளை கைவிட்டு, துறை சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கைகளில் மருத்துவப் பணிகள் கழகம் கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<<

பத்திரப் பதிவுத்துறை, தனியார் மயமாக்கப்படாது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.

நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், Star 3.0 திட்டம் தனியார் மயமாக்குவதற்கான திட்டம் இல்லை என்று தெரிவித்தார்.

இது, பத்திரப் பதிவுத்துறையை மேம்படுத்தும் நடவடிக்கை என்று அவர் கூறினார்.

பத்திர எழுத்தர்கள் சிலர் இதுகுறித்த விழிப்புணர்வு இல்லாமல் எதிர்ப்பு தெரிவிப்பதாக அவர் தெரிவித்தார்.

பதிவுத்துறையில் முறைகேடுகளை தடுக்க நவீன தொழில்நுட்ப வசதி ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறினார்.

>>>>><<<<<<

தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளை ஒட்டிய சில இடங்களில், இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற இடங்களில், இன்று வறண்ட வானிலையே நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள அக்வான் புயல் காரணமாக, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் நாளையும், நாளை மறுநாளும் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

ரஷ்யாவின் அச்சுறுத்தலைச் சமாளிக்கத் தேவையான ஆயுதங்களை மேற்கத்திய நாடுகள் யுக்ரைனுக்கு அதிக அளவில் வழங்க வேண்டும் என்று யுக்ரைன் அதிபர் திரு. *Volodymyr Zelenskyy* கூறியுள்ளார்.

>>>>><<<<<<

புதுதில்லியில் உள்ள தேசிய மலேரியா ஆராய்ச்சி நிறுவனத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

>>>>><<<<<<

கான்பூர் - தில்லி இடையேயான புதிய விரைவு ரயில் சேவையை ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<<

வழக்குகளுக்கு விரைவாகத் தீர்வு காண்பது குறித்து மாநிலங்களின் தலைமை வழக்கறிஞர்களுடன் மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மேக்வால் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

>>>>><<<<<<

கோவாவில் வரும் 20-ம் தேதி தொடங்கவுள்ள இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கான ஏற்பாடுகள் குறித்து அம்மாநில முதலமைச்சர் திரு பிரமோத் சாவந்த் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>><<<<<<

தேசிய விளையாட்டு வாரியத்தின் புதிய தலைவராக திரு தேவேஷ் சதுர்வேதி நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>><<<<<<

சுற்றுலா மற்றும் கலாச்சாரம் தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் திரு சஞ்சய் குமார் ஜா தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், தஞ்சை மாவட்டம் கல்லணை மற்றும் தஞ்சாவூர் பெரிய கோயிலில் ஆய்வு மேற்கொண்டனர்.

>>>>><<<<<<

சமூக நீதித்துறையின் ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளில், பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. வன்னி அரசு பணி ஆணைகளை வழங்கினார்.

>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டார் - புனித சவேரியார் பேராலய திருவிழாவை முன்னிட்டு டிசம்பர் மாதம் 3-ம் தேதி அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டம் குரிசிலாப்பட்டு அணைக்கட்டில் இருந்து மாடப்பள்ளி ஏரிக்கு செல்லும் கால்வாயை தூர்வாரும் பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. நல்லசிவன் தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<<

சென்னை ஐஐடி வளாகத்தை வரும் ஜனவரி 2-ம் தேதி முதல் 4-ம் தேதி வரை பொதுமக்கள் பார்வையிடலாம் என்றும், இதற்கு வரும் 30-ம் தேதிக்குள் இணையதளம் மூலம் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் அதன் இயக்குநர் திரு. காமகோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

கத்தாரில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில் குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் 11-4, 11-7, 11-4 என்ற செட்கணக்கில் பிரான்ஸின் Manuel Paquemar-ஐ வென்றார்.

>>>>><<<<<<

சையத் முஷ்டாக் அலி கோப்பைக்கான டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தூரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஜம்மு கஷ்மீர் அணி 6 ரன் வித்தியாசத்தில் தமிழக அணியை வென்றது.

>>>>><<<<<<